**செய்தி வெளியீடு எண்: 692** **நாள்:20.09.2020**

**<u>செய்தி வெளியீடு</u>**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்களை **19.9.2020** அன்று தலைமைச் செயலகத்தில், மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்கள் சந்தித்து, சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்திற்கு, Dial for Water 2.0 என்ற திட்டத்திற்காக வழங்கப்பட்ட ஸ்கோச் தங்க விருது மற்றும் கல்குவாரிகளை சேமிப்பு நீர்த்தேக்கங்களாக மாற்றிய திட்டத்திற்காக வழங்கப்பட்ட தேசிய நீர் புதுமை விருது (National Water Innovation Award 2020) ஆகிய விருதுகளை காண்பித்து வாழ்த்து பெற்றார்.

ஸ்கோச் நிறுவனத்தால் கடந்த **30.7.2020** அன்று அரசு மூலம் பொதுமக்களுக்கு சேவை வழங்கல் பிரிவின் கீழ் Dial for Water 2.0 என்ற திட்டத்திற்காக சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்திற்கு ஸ்கோச் தங்க விருது வழங்கப்பட்டது.

Elets Technomedia Pvt. Ltd., என்ற நிறுவனம் இந்திய அரசின் நீர்வள அமைச்சகத்துடன் இணைந்து **28.8.2020** அன்று நடத்திய தேசிய நீர் புதுமை உச்சி மாநாடு **2020–ல்** (Elets National Water Innovation Summit 2020) மழைநீர் சேகரிப்பில் புதுமை என்ற பிரிவின் கீழ் கல்குவாரிகளை சேமிப்பு நீர்த்தேக்கங்களாக மாற்றிய திட்டத்திற்காக சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்திற்கு தேசிய நீர் புதுமை விருது வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வின்போது, தலைமைச் செயலாளர் திரு. க. சண்முகம், இ.ஆ.ப., நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு.ஹர்மந்தர் சிங், இ.ஆ.ப., சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் திரு.டி.என். ஹரிஹரன், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**